## ஆர்.பாலகிருஷ்ணன் நியமனம் : அகழாய்வும் ஆராய்ச்சியும் இணையும் காலம்!



சென்னையில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக, ஓய்வுபெற்ற ஆட்சிப் பணி அதிகாரியும், சிந்துவெளி ஆய்வாளருமான ஆர். பாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் தமிழாராய்ச்சிப் பணிகளில் புதிய ஊக்கத்தை, அரசு அளித்துள்ளது என சமூகவலைத்தளங்களில் பலரும் பதிவிட்டு வருகின்றனர்.

சிந்துவெளிப் பண்பாட்டுத் தொல்லியல் தரவுகளை சங்க இலக்கியம் மற்றும் தமிழ்நாட்டு அகழாய்வுத் தரவுகளோடு ஒப்பிட்டு, ஆங்கிலத்திலும், தமிழிலும் இவர் எழுதிய ‘ஒரு பண்பாட்டின் பயணம்’ நூல் தமிழர்களின் தொன்மையை உலக அரங்கிற்குக் கொண்டு சென்ற குறிப்பிடத்தக்க நூலாகும். திராவிட மொழிக் குடும்பத்தின் பரவல், சிந்து சமவெளிப் பண்பாடு, தொல்தமிழ்த் தொன்மங்கள், சங்க இலக்கியங்கள் மற்றும் திருக்குறள் குறித்த, இவரது செயல்பாடுகளும் உலகத் தமிழர்களால் கொண்டாடப்பட்டவை. குறிப்பாக, ‘சிந்துவெளி விட்ட இடமும், சங்க இலக்கியம் தொட்ட இடமும்’ ஒன்றே என இவர் நிறுவியச் சான்றுகள், தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழ்வாய்வில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தின. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பொறுப்புக்கு, பாலகிருஷ்ணனை நியமனம் செய்துள்ளதன் மூலம், ‘திராவிட மாடல் அரசு’ முன்னெடுத்துவரும் தொல்லியல் அகழாய்வுப் பணிகளோடு தமிழாராய்ச்சிப் பணிகளும் இணைந்து செயல்படும் வாய்ப்பு உருவாகி உள்ளது.

கலைஞரின் பெருமுயற்சியால் செம்மொழி பெறப்பட்டு, அதன்பெயரால் அமைந்த உயர்கல்வி நிறுவனம், தமிழாய்வை ஆரியப் புரட்டுகளுடன் ‘அகத்தியர் நாள்’ ‘அகத்தியர் கருத்தரங்கு’ என ஆர்.எஸ்.எஸ். கருத்துகளை பரப்பி வரும் சூழலில், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்துக்கு ஆர்.பாலகிருஷணன் நியமனம் தமிழ்நாட்டு அரசின் தமிழிலக்கிய இலக்கிற்கு சான்றாகும்.

## ஃப்ளாஷ்பேக்



### கனவு நிறைவேறிய நாள்!



புலவர் அரங்க.நாராயணசாமி

2016-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 10-ஆம் தேதி, கழகத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்தேன். அவரைப் பார்க்க வேண்டும், அவரோடு புகைப்படம் எடுக்க வேண்டும் என்ற எனது நீண்ட நாள் விருப்பம் அன்று நிறைவேறியது. அப்போது தேர்தல் நிதியாக ஆயிரம் ரூபாய் கொடுத்து வாழ்த்துப் பெற்றேன். நிதியைப் பெற்றுக்கொண்ட தலைவர் எனக்கு நன்றி கூற, நானும் அவருக்கு நன்றி தெரிவித்து விடைபெற்றேன். அப்போது, இன்றைய தலைமை நிலையச் செயலாளர் அண்ணன் பூச்சி முருகன் அவர்களும், அண்ணன் சண்முகநாதன் அவர்களும் உடனிருந்தனர்.

– **புலவர் அரங்க.நாராயணசாமி, துறையூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பொய்ப் புகார்களை தோலுரித்த தலைவர்!

1972-ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தில், கழக ஆட்சிமீது, எதிர்க்கட்சியினர் பொய்யான பல குற்றச்சாட்டுகளை, அரசியல் காரணங்களுக்காக ஒன்றிய அரசுக்கு அனுப்பினர். அந்தப் புகார்கள் எல்லாம் பொய் என்பதை, ஆதாரத்துடன் விளக்கி, டிசம்பர் மாதத்தில் பதில் அளித்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்தப் பதில்கள் புத்தகமாகவே அச்சிடப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றத்திலும் வைக்கப்பட்டன.

## பொய்ப்பெட்டி

51

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”

***முதல்வர் மருந்தகம் என்பது பிரதமர் பெயரிலான ஒன்றிய பா.ஜ.க. அரசின் ‘ஜன் ஔஷாதி’ மருந்தகத்தின் காப்பி என்று பா.ஜ.க. நிர்வாகிகள் பதிவிட்டுக் கொண்டு இருக்கிறார்களே?***

*கண்ணாடி முன் நின்றுகொண்டு, ‘இந்தக் குரங்கு பொம்மை என்ன விலை?’ என்பது போலத்தான் பா.ஜ.க. கூட்டம் செயல்படுகிறது. காப்பி அடிப்பதும், ஸ்டிக்கர் ஒட்டுவதும் பா.ஜ.க.வின் பாரம்பரிய வேலை என்பதற்கு, காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியத் தலைவராகவும், நேருவின் அமைச்சரவையில் வலிமையான அமைச்சராக இருந்தவருமான வல்லபாய் பட்டேல் சிலையை குஜராத்தில் நிறுவி, அவரைத் தங்களின் தலைவராக ஸ்டிக்கர் ஒட்டியதிலேயே புரிந்து கொள்ளலாம்.*

**முதல்வரின் ‘மகளிர் உரிமைத் தொகை’, ‘காலை உணவுத் திட்டம்’, ‘விடியல் பயணத் திட்டம்’ ஆகியவற்றை பா.ஜ.க.வும் மற்ற கட்சிகளும் பல மாநிலங்களிலும் ஸ்டிக்கர் ஒட்டி நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றன.**




## மருத்துவக் கட்டமைப்பின் தொடர்ச்சி!

*‘முதல்வர் மருந்தகம்’ என்பது தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் வலுவாக உருவாக்கியுள்ள மருத்துவக் கட்டமைப்பின் தொடர்ச்சி. மாவட்டங்கள் தோறும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், நகரங்கள் தோறும் அரசுப் பொது மருத்துவ மனைகள், கிராமங்களுக்கு ‘ஆரம்ப சுகாதார நிலையம்’, ‘ஏழை மக்களின் உயிர் காக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்’, ‘108 ஆம்புலன்ஸ் சேவை’ என கலைஞர் உருவாக்கிய கட்டமைப்பின் தொடர்ச்சியாக, 2010-இல் அவருடைய ஆட்சிக் காலத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்த கோ.சி.மணி அவர்களின் முயற்சியால், 210 மருந்தகங்கள் கூட்டுறவு அமைப்பின் வாயிலாக நடத்தப்பட்டு, 10% விலை குறைவாக மக்களுக்கான அத்தியாவசிய மருந்துகள் விற்பனை செய்யப்பட்டன. இதனால், நகர்ப்புறங்களில் இருந்த தனியார் மருந்தகங்களும் விலையைக் குறைக்க வேண்டிய நிலைக்குள்ளான தால், ஏழை மக்களும் ஓரளவு பயன்பெற்றனர். பின்னர், அ.தி.மு.க. ஆட்சியில் கூட்டுறவு மருந்தகங்களைப் பின்பற்றி, அம்மா மருந்தகங்கள் தொடங்கப்பட்டன. இவற்றுக்கெல்லாம் பிறகுதான் ஒன்றிய அரசின் சார்பிலான ‘ஜன் ஔஷாதி மருந்தகங்கள்’ ஆரம்பிக்கப் பட்டன. இதிலிருந்து, யாருடைய திட்டத்திற்கு யார்-யார் ஸ்டிக்கரை ஒட்டியிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். பிரதமர் படத்துடன் நடத்தப் படும் ‘ஜன் ஔஷாதி’ மருந்தகத்தில் சர்க்கரை நோய் மாத்திரை விலை 30 ரூபாய். முதல்வர் மருந்தகத்தில் அதே மாத்திரை 11 ரூபாய்தான்.*


*1969-இல் தொடங்கி 2011-ஆம் ஆண்டு வரை முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் இந்தியாவுக்கே முன்னோடியாகக் கொண்டு வரப்பட்ட, ‘குடிசை மாற்று வாரியம்‘, ‘மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்’, ‘உழவர் சந்தை’, ‘இலவச சமையல் கேஸ் இணைப்பு’ எனப் பல்வேறு திட்டங்களை ஒன்றிய அரசின் திட்டமாக அறிவித்து, ஸ்டிக்கர் ஒட்டியவர் பிரதமர் மோடி.*

*இன்றை திராவிட மாடல் அரசை வழிநடத்தும் முதல்வரின் ‘மகளிர் உரிமைத் தொகை‘, ‘காலை உணவுத் திட்டம்’, ‘விடியல் பயணத் திட்டம்’ ஆகியவற்றை பா.ஜ.க.வும் மற்ற கட்சிகளும் பல மாநிலங்களிலும் ஸ்டிக்கர் ஒட்டி நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றன.*

**...வினா தொடரும்.**

**ர.பிரகாசு**





## பெண்ணிய உரிமைகளுக்கு வழிகாட்டும் தமிழ்நாடு!

*இந்தியாவில் வீடு - கல்வி நிலையங்கள் - பணியிடங்கள் என எல்லா இடங்களிலும் பாலினப் பாகுபாடு, மிகத் தீவிரமாக இருக்கிறது என்பது உலகறிந்த செய்தி. ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறையின் ‘டைம் யூஸ் சர்வே-2024’, என்கிற அறிக்கை, பாலினப் பாகுபாட்டின் இடைவெளியைக் குறைக்க, அகில இந்திய அளவில் இன்னமும் பன்மடங்கு தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டிய தேவையை உணர வைத்திருக்கிறது.*

*இந்த ஆய்வின்படி, இந்தியப் பெண்கள் சராசரியாக நாள் ஒன்றுக்கு 4.81 மணி நேரம் வீட்டுவேலைகளைச் செய்கிறார்கள். இந்த வேலைக்கு ஊதியம் கிடையாது. ஆனால், ஆண்கள் சராசரியாக 1.28 மணிநேரம் மட்டுமே வீட்டு வேலைகளுக்காகச் செலவிடுகிறார்கள். கடந்த 5 ஆண்டுகளில் இந்த இடைவெளி குறிப்பிடத்தக்க அளவுக்கு குறையவில்லை. 2019-இல் இதே ஆய்வில் பெண்கள் சராசரியாக 5 மணி நேரமும், ஆண்கள் 1.37 மணி நேரமும் வீட்டுவேலைகள் செய்வதாகக் கூறியுள்ளனர். அதேபோல பராமரிப்புப் பணிகளில் பெண்கள் நாள் ஒன்றுக்கு 2.20 மணி நேரம் ஈடுபடுகிறார்கள் என்றால், ஆண்கள் வெறும் 1.14 மணி நேரம் மட்டுமே செலவிடுகிறார்கள். 15-59 வயதுக்குட்பட்ட வேலைக்குச் செல்வோரில் ஆண்கள் 75%-ஆகவும், பெண்கள் 25%-ஆகவும் உள்ளனர். அதாவது இன்னமும் பெண்கள் வீட்டுவேலையில்தான் பெருமளவு முடக்கப்பட்டிருக்கிறார்கள்.*

*ஆனால், இந்தத் தரவுகள் தமிழ்நாட்டுக்கு அப்படியே பொருந்தாது. 2023-க்குள் உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் 50%-ஐ எட்ட வேண்டுமென்று இலக்கு நிர்ணயித்திருக்கிறது ஒன்றிய அரசு. அந்த இலக்கை தமிழ்நாடு எப்போதோ எட்டிவிட்டது என்பது மட்டும் நமது சாதனையல்ல. அதில் பெண்களின் உயர்கல்விச் சேர்க்கை விகிதம் 48.3% என்பதும் மிக முக்கிய சாதனை. இந்தச் சாதனையை எட்ட, துணைநின்ற திட்டங்களில் ‘மூவலூர் இராமமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்திற்கு’ மிக முக்கியப் பங்கு உள்ளது. கல்வி குறித்து, திராவிட இயக்கம் கொண்டிருந்த விழிப்பு உணர்வும் முக்கியமானது. திராவிட மாடல் அரசின் ‘புதுமைப்பெண்’ திட்டத்தால் இந்த எண்ணிக்கை அடுத்த சில ஆண்டுகளில் பன்மடங்கு உயரப்போகிறது.*

*அதேபோல 15-59 வயதுக்குட்பட்ட பெண்கள் அமைப்புசார்ந்த வேலைவாய்ப்பில் பங்கேற்கும் விகிதம், இந்திய அளவில் 24.6% என்றால் தமிழ்நாட்டில் 41%-ஆக உயர்ந்து நிற்கிறது. திராவிட மாடல் அரசின் **‘தோழி’ விடுதிகளும்,** மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து வசதிகளும் பெண்கள் வேலைக்குச் செல்லும் எண்ணிக்கையை உயர்த்திக்கொண்டி ருக்கின்றன.*

**நாடு முழுவதும் 10 நகரங்களில் நடத்தப்பட்டது இந்த ஆய்வு. அதில் சென்னையில் மட்டும்தான் 77% பெண்கள், தங்களுக்கு ஆண்களுக்கு நிகரான ஊதியம் கிடைப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.**

*குறிப்பாக, தமிழ்நாட்டில் ஆட்டோமொபைல், பேட்டரி வாகனங்கள், செல்போன் தயாரிப்பு, மின்னணுச் சாதனங்கள், ஜவுளி உற்பத்தி, மற்றும் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களிலும் ஆண்களுக்கு நிகராகப் பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு அதிகரித்திருக்கிறது. வீட்டு வேலைகளையும் அங்கீகரிக்கும் விதமாகவே, திராவிட மாடல் அரசின் ‘கலைஞர் மகளிர் உரிமைத்தொகை’ திட்டம் அமைந்துள்ளது.*

*கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் டி.பி.எஸ். வங்கியும், கிரிசில் நிறுவனமும் இணைந்து நடத்திய ஒரு ஆய்வில், இந்தியாவில் பணியிடங்களில் ஊதியப் பாகுபாடு இருப்பதாக 23% பெண்களும், ஆண்களுக்கு நிகரான ஊதியம் கிடைப்பதில்லை என்று 42% பெண்களும் கூறியுள்ளனர்.*

*நாடு முழுவதும் 10 நகரங்களில் நடத்தப்பட்டது இந்த ஆய்வு. அதில் சென்னையில் மட்டும்தான் 77% பெண்கள், தங்களுக்கு ஆண்களுக்கு நிகரான ஊதியம் கிடைப்பதாகக் கூறியிருக்கிறார்கள். பெண்ணிய உரிமைகளை நிலைநாட்டுவதிலும், இந்தியாவுக்கு, தமிழ்நாடுதான் வழிகாட்டுகிறது!*

## திராவிடத்தால் வாழ்கிறோம்

763

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131